DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.9**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | மணிமாறன் |
| Father Name | : | ஜெயகோபால் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.03.2025.

(2வது எதிரி ஆஜர். 3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது கற்பகம் நகரில் குடியிருக்கிறேன். இவ்வழக்கில் காயம்பட்ட ராமகிருஷ்ணன் என்பவரை எனக்கு தெரியும். எனக்கு வழக்கு பற்றி வேறு எந்த விவரமும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது இவ்வழக்கில் ஆரோக்கிய பிரபு, சகாய பிரவீன், வேல்ராஜ், கர்ணன் ஆகியோர்களை எனக்கு நன்றாக தெரியும் என்றும், சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பு அய்யப்பன் கோவில் முன்பு சகாய பிரவீனை பார்த்தேன் என்றும், அப்போது உங்கள் அண்ணன் ஆரோக்கிய பிரபு எங்கிருக்கிறார் என்று கேட்டேன் என்றும், அதற்கு சகாய பிரவீன் அவரது நண்பரின் திருமணத்திற்காக மாட்டுத்தாவணி எதிரில் உள்ள அண்ணாலை Hotel

அறை எண்.219ல் தங்கியிருக்கிறார் என்று சொன்னார் என்றும், நான் 15.11.2015ம் தேதி ஆரோக்கிய பிரபுவை பார்ப்பதற்கு அண்ணாமலை ஹோட்டலுக்கு சென்றிருந்தேன் என்றும், அங்கு மேற்படி எதிரிகள் ரூமில் இருந்தார்கள் என்றும், நம்முடைய வழக்கிற்கு நிறைய செலவு ஆகிறது, அப்பணத்தை பெறுவதற்கு மிகுந்த கஷ்டமாக இருக்கிறது, ஆகவே, ராமகிருஷ்ணனிடம் சொல்லி பணத்தை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பேசிக்கொண்டார்கள் என்றும், இது சம்பந்தமாக அட்டாக் பாண்டி பணம் ஏற்பாடு செய்து தரவில்லை என்றால் ராமகிருஷ்ணனை ஏதாவது போட்டுத்தள்ளுங்கடா என்று சொன்னார் என்றும் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், 21.11.2015ம் தேதி இரவு 01.15 மணியளவில் ராமகிருஷ்ணன் தம்பி மகேஷ் என்பவர் எனக்கு போன் செய்து ராமகிருஷ்ணனை புதூர் கார்த்திக் தியேட்டர் எதிரில் உள்ள குரு சலூன் கடை முன்பு யாரோ கத்தியில் குத்திவிட்டதாக சொல்லி அவரை தேவதாஸ் மருத்துவமனைக்கு தூக்கிக்கிட்டு போறாங்கலாம், நீ போய் பாரு என்று சொன்னார் என்றும், மறுபடியும் திரும்ப மகேஷ் தேவதாஸ் மருத்துவமனையிலிருந்து அப்போலோ மருத்துவமனைக்கு கொண்டுபோய் விட்டதாக சொன்னதன் பேரில் நான் அப்போலோ மருத்துவமனைக்கு சென்று ராமகிருஷ்ணனை அவசர சிகிச்சை பிரிவில் சென்று பார்த்துவிட்டு வந்தேன் என்றும், ராமகிருஷ்ணனை சகாய பிரவீன் கத்தியால் குத்திவிட்டு ஓடிவிட்டதாக சொன்னார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.